# உகாண்டா வெளியுறவு அமைச்சரின் இந்தியா வருகை (2014 ஜூலை 27-31)

**ஜூலை 27, 2014**

வெளிவிவகார அமைச்சர் அழைப்பின் பேரில், உகாண்டா வெளியுறவு அமைச்சர் மாண்புமிகு சாம் குடேஸா அவர்கள் ஜூலை 27-31 ,2014 ல் புது தில்லிக்கு வருகை செய்ய உள்ளார். மாண்புமிகு குடேஸா அவர்களின் தூதுக்குழுவில் மூன்று அமைச்சர்கள் அதாவது, தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்,மாண்புமிகு ஜான் நசாசீரா மற்றும் மீன் வள இணை அமைச்சர் மாண்புமிகு ரூத் நன்கபிர்வ, முதலீடுகள் இணையமைச்சர்,டாக்டர் அஜெத்ரா கேப்ரியல் அரித்ரு ஆகியோரும் மற்றும் உகாண்டா அரசின் மற்ற மூத்த அதிகாரிகளும் வர உள்ளனர்.

2.இந்த வருகையின் போது, திரு குடேஸா வெளிவிவகார அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதோடு பிரதமருக்கும் ஒரு மரியாதை நிமித்தமான அழைப்பு விடுக்க உள்ளார்.

3.இந்தியா மற்றும் உகாண்டா நட்பும் மனமுவந்த உறவுகளும் பகிர்ந்து கொண்டுள்ள நாடுகள் ஆகும்.இந்தியா உகாண்டாவின்

பெரிய வர்த்தக பங்காளியாக உள்ளது மற்றும் உகாண்டாவின் பொருளாதாரம் மற்றும் சமுதாயத்தில் கணிசமான பங்களிப்பு செய்ய இந்திய வம்சாவளி வழியான ஒரு பெரிய மக்கள் தொகை அங்கு உள்ளது. இந்தியா மற்றும் உகாண்டா மனித வள மேம்பாடு உள்ளிட்ட திறன் வளர்க்கும் துறைகளில் நெருக்கமாக ஒத்துழைக்கின்றன.உகாண்டா மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் தற்போது உயர் கல்விக்காக பல்வேறு இந்திய நிறுவனங்களில் பயில்கிறார்கள் என்பதை ஆராய்கிறோம். இரு நாடுகளும் பிராந்திய மற்றும் உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து பல்வேறு கருத்துக்களை ஒற்றுமையாக பகிர்ந்து கொள்கிறது.

4.வெளியுறவு அமைச்சர் குடெஸா அவர்களின் வருகை இந்திய உகாண்டா உறவுகளை முன்னேற்றவும் மேலும் ஒரு புதிய ஊக்கத்தையும் கொடுக்கும் என நம்புகிறோம்.

**புது தில்லி**

**27 ஜூலை, 2014**